TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~
(undersection 173 BNSS)

C 8082807

04/2024/AC/CB

1. District : Coimbatore PS: V&AC Year: 2024 FIR No.: Date: 07/08/2024
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The prevention of Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Corruption Act 1988 as Sections பிரிவுகள்: 7(a), 7(a) r/w 12
(iii) Act சட்டம்: amended in 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Wednesday
Date from : நாள் முதல் 06/08/2024 Date to : நாள் வரை 07/08/2024
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 22.00hrs Time to : நேரம் வரை 05.30hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07/08/2024 Time நேரம் 13.30hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD VOL-I Time நேரம் 1400hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: About 25km North East
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி Office of the Sub-Register periyanaickanpalayam, Coimbatore Dist.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. S. Jegadeesan (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Dy. Inspection cell officer/Tashildar
(g) Address : முகவரி O/o District Inspection cell officer Coimbatore Dist collectorate Campus Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. Tmt. B. Aruna, SRO. periyanaickanpalayam, CBE District
2. Tr. S. David. S/o. Sekar. D.No. 31 Ambedkar Road Velandipalayam Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No Delay.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted :-
Separate sheets herewith enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed R. Kowsalya Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS Vigilance and Anti Corruption point of jurisdiction. CBE

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 07/8/2024      [signature] 07/08/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 07/08/2024 at 15.00 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் D. SHEELA
Rank: நிலை Inspector of police No. எண் ..........
Vigilance and Anti Corruption Coimbatore
07/08/2024.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

**Contents of FIR in Cr.No.4/2024/AC/CB, u/s 7(a), 7(a) r/w 12 of the Prevention of Corruption Act 1988 as amended by the prevention of corruption (Amendment) Act, 2018.**

இன்று 07.08.2024 ஆம் தேதி செவ்வாய்கிழமை 13.30 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் D.ஷீலா ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.S.ஜெகதீசன், வட்டாட்சியர் / துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோவை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை பெற்று கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். V&AC Cr.No.4/2024/AC/CB, u/s 7(a), 7(a) r/w 12 of PC Act, 1988 as amended by PC (Amendment) Act, 2018 ஆக 14.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் S.ஜெகதீசன், துணை ஆய்வுக்குழு அலுவலர்/ வட்டாட்சியர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயமுத்தூர். பெறுநர்-காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோவை-30, ந.க.எண்.150/2024/ஐ1, நாள்-07.08.2024 அய்யா, பொருள்: திடீர் தணிக்கை - கோயம்புத்தூர் மாவட்டம் சார்பதிவாளர் அலுவலகம், பெரியநாயக்கன்பாளையம், கோயமுத்தூர் - திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - நடவடிக்கை குறிப்புடன் புகார் மனு மேல்நடவடிக்கைக்காக அனுப்புதல் - சம்பந்தமாக. கோயமுத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் சார்-பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்வதற்கும், வில்லங்க சான்று பெறுவதற்கும் வருகை தரும் பொதுமக்களிடமிருந்தும், பத்திர எழுத்தர்களிடமிருந்தும் நேரடியாகவும் மறைமுகமாகவும் கையூட்டு பணம் பெற்று வருவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் நானும், கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.தெ.ஷீலா மற்றும் காவல் குழுவினருடன் இணைந்து

மேற்படி அலுவலகத்தை 06.08.2024ம் தேதி 22.00 மற்றும் 07.08.2024ம் தேதி 05.30 மணிவரை திடீர் தணிக்கை செய்யப்பட்டது. மேற்படி அலுவலத்தில் திடீர் தணிக்கை மேற்கொண்டபோது மாலை சுமார் 06.30 மணியளவில் மேற்படி அலுவலகத்திலிருந்து TN 66 P 1138 என்ற பதிவெண்கொண்ட SWIFT DZIRE, T-Board கார் ஒன்று வெளியே வந்துகொண்டிருந்தது அதன் இடது பின்இருக்கையில் சார்பதிவாளர் திருமதி.அருணா அவர்கள் அமர்ந்திருந்தார். அதனைத்தொடர்ந்து திரு.டேவிட் என்பவர் இருசக்கரவாகனத்திலும் அலுவலகத்தை விட்டு வெளியே வந்தார். சார்பதிவாளர் திருமதி.அருணா அவர்கள் அமர்ந்திருந்த கார் இவ்வலுவலகத்தின் இடது புறமும் திரு.டேவிட் வலது புறமும் சென்றார்கள். உடனே சார்பதிவாளர் திருமதி.அருணா அவர்கள் இருந்த காரை நான் மற்றும் ஊ.த.க காவல் குழுவினரும், திரு.டேவிட்டை எனது அறிவுரைப்படி மற்றொரு குழுவினராலும் பின்தொடரப்பட்டது. திரு.டேவிட் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அருகிலிருந்த ஒரு பேக்கரியில் ஏதோ ஒரு பார்சலை வாங்கிக்கொண்டு சார்பதிவாளர் சென்ற திசையிலேயே சென்றுகொண்டிருந்தார். அன்று மாலை சுமார் 06.45 மணியளவில் திருமதி.அருணா அவர்கள் சென்று கொண்டிருந்த கார் கீரணத்தம் ரோடிலுள்ள குப்புச்சிபாளையம் GKD பள்ளிக்கு அருகில் நிறுத்தப்பட்டது. மேற்படி கார்நிறுத்தப்பட்ட சிறிது நேரத்திலேயே மேற்படி திரு.டேவிட்டும் TN 38 DB 9193 என்ற பதிவெண்கொண்ட இருசக்கரவாகனத்தில் அங்கு வந்தார். அப்போது காரின் இடது பின்கதவு திறக்கப்பட்டவுடன் திரு.டேவிட் காருக்குள்ளிருந்த திருமதி.அருணா அவர்களிடம் எதையோ கொடுத்துகொண்டிருந்தார். உடனே நான் மற்றும் ஊ.த.க சோதனைக்குழுவினர் மேற்படி காரின் அருகில் சென்று, அதன் பின்இருக்கையில் அமர்ந்திருந்த பெரியநாயக்கன்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக (அயல்பணி) பணிபுரியும் திருமதி.அருணா என்பவரிடம் இரவு சுமார் 07.00 மணியளவில் நான் மற்றும் என்னுடன் வந்த ஊ.த.க. காவல் ஆய்வாளர்கள் மற்றும் குழுவினரை அறிமுகப்படுத்திக்கொண்டோம். அதனைத்தொடர்ந்து மேற்படி காரினை பார்வையிட்டதில் அதன் இடதுபக்க முன்இருக்கையின் பின்புற சீட்கவரில் மஞ்சள் நிறப்பை ஒன்று பாதி நுழைத்துவைக்கப்பட்ட நிலையில் இருந்ததை என்னுடைய அறிவுரைப்படி சார்பதிவாளர் திருமதி.அருணா அவர்கள் எடுத்து திறந்து

காட்ட அதில் கட்டுகட்டாக 500 ரூபாய்தாள்கள் வைக்கப்பட்டிருந்தது. மேலும் சார்பதிவாளர் சென்ற காரை சோதனை செய்யவேண்டியது குறித்து சார்பதிவாளரிடம் தெரிவிக்கப்பட்டது. மேலும் மேற்படி கார் நிறுத்தப்பட்டிருந்த பகுதி மக்கள் நடமாட்டமுள்ள நெடுஞ்சாலை என்பதினாலும் அப்பகுதியில் போதிய வெளிச்சம் இல்லாத காரணத்தினாலும் அவ்விடம் சோதனை மேற்கொள்ள ஏதுவாக இருக்காது என்பதினாலும் சோதனையை தொடர்ந்து மேற்கொள்வதற்கு அங்கிருந்து சுமார் 3கிமீ தொலைவிலுள்ள பெரியநாயக்கன்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்வது குறித்து திருமதி.அருணா அவர்களிடம் கேட்க அவரது சம்மதித்ததின்பேரில் சார்பதிவாளருடன் அங்கிருந்து புறப்பட்டு இரவு சுமார் 07.40 மணியளவில் ஆய்வுக்குழுவினர் பெரியநாயக்கன்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தை வந்தடைந்தோம். அதனைத்தொடர்ந்து சார்பதிவாளர் திருமதி.அருணா அவர்கள் வீட்டிற்கு பயணம்செய்துகொண்டிருந்த மேற்படி வாடகைக்காரினை சோதனை செய்ததில் அதிலிருந்த மஞ்சள்நிறப்பை, சார்பதிவாளரது கைப்பை, காக்கிகவரில் வைக்கப்பட்ட தேங்காய்பன் மற்றும் மதியஉணவுப்பை ஆகியவற்றை எடுத்துக்கொண்டு அவற்றை சோதனை செய்வதற்காக இவ்வலுவலகம் வந்து அங்கிருந்த இருவர் முன்னிலையில் இவ்வலுவலகத்தின் பிராதான அறையில் மேற்படி சார்பதிவாளர் இருக்கை மேசையில் வைத்து முதலில் மஞ்சள்நிறப்பையினை சோதனையிட்டதில் அதில் 6 எண்ணிக்கையிலான 500 ரூபாய் நோட்டுக்கற்றைகள் காணப்பட்டது அவற்றை எண்ணிப்பார்க்க மொத்தம் 560 எண்ணிக்கையுடைய 500 ரூபாய் தாள்கள் மொத்தம் ரூ.2,80,000/- (560X500=2,80,000/-) இருந்தது. இதுகுறித்து சார்பதிவாளர் திருமதி.அருணா அவர்களிடம் விசாரிக்க அவர் அதற்கான சரியான முகாந்திரம் தெரிவிக்கவில்லை எனவே மேற்படி பணம் ரூ.2,80,000/- மற்றும் அந்த பணம் வைக்கப்பட்டிருந்த மஞ்சள் நிறப்பை ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சார்பதிவாளரிடம் வேறுபணம் ஏதேனும் உள்ளதா என்று கேட்க அவர் தனது கைப்பையிலிருந்து மொத்தம் ரூ.2,880/-ஐ எடுத்து ஆஜர்செய்தார். அதுகுறித்து சார்பதிவாளரை விசாரிக்க அது தனது சொந்தப்பணம் என்று தெரிவித்தார். இதுசம்மந்தமாக இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பணம் கையிருப்பு

பதிவேட்டினை பார்வையிட அதில் சார்பதிவாளர் திருமதி.அருணா அவர்களின் பெயரில் 06.08.2024-ம் தேதியில் ரூ.1,500/- மட்டும் குறிபிடப்பட்டிருந்தது. மேலும் மேற்படி பதிவேட்டில் குறிப்பிடப்படாத ரூ.1,380/-ஐ குறித்து சார்பதிவாளரிடம் கேட்க, தான் தனது சிறிய மணிபர்சில் வைத்திருந்த மேற்படி ரூ.1,380/-ஐ பணம் கையிருப்பு பதிவேட்டில் பதிவுசெய்ய மறந்துவிட்டதாக தெரிவித்தார். மேற்படி ரூ.2,880/- சார்பதிவாளரிடமே திரும்பஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து சார்பதிவாளரை விசாரிக்க அவர் கடந்த 2022-ம் வருடம் நவம்பர் முதல் இவ்வலுவலகத்தில் சார்பதிவாளராக (அயல்பணி) பணிபுரிந்து வருவதாகவும், மேலும் திரு.ரமேஷ் என்பவர் இவ்வலுவலகத்தின் சார்பதிவாளர் எனவும் ஆனால் 06.08.2024-ம் தேதி அவர் விடுப்பிலிருப்பதாகவும் தெரிவித்தார். பின்னர் மேற்படி பணம் குறித்து மேற்படி வாடகைக்காரின் ஓட்டுனர் திரு.சதீஷ்குமார் என்பவரை விசாரிக்க அவர் கடந்த 6 மாதங்களாக தனது நிறுவனத்தின் மூலம் வாடகைக்கு ஓட்டிவரும் காரில், சார்பதிவாளரை Pickup மற்றும் Drop செய்யும் வேலையை செய்துவருவதாகவும் அந்தவகையில் 06.08.2024-ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் பெரியநாயக்கன்பாளையம் சார்பதிவாளர் அலுவலகம் வந்து திருமதி.அருணா அவர்களை Drop செய்துவிட்டு சார்பதிவாளர் திருமதி.அருணா அவர்களை Pickup செய்வதற்காக மேற்படி அலுவலகத்திலேயே காத்திருந்ததாகவும், அன்று மாலை திரு.டேவிட் சார்பதிவாளரது உடமைகளை எடுத்து வந்து தனது காரில் வைத்ததாகவும், அதன் பின்னர் சுமார் 06.30 மணியளவில் சார்பதிவாளர் திருமதி.அருணா அவர்கள் காரில் வந்து உட்கார்ந்ததும் புறப்பட்டு, கீரணத்தம் ரோடிலுள்ள குப்புச்சிபாளையம் GKD பள்ளிக்கு அருகில் வந்தபோது சார்பதிவாளர் காரை நிறுத்தும்படி சொன்னவுடன் தான் நிறுத்திவிட்டதாகவும், காரை நிறுத்திய சிலநிமிடத்தில் மேற்படி டேவிட் இருசக்கர வாகனத்தில் அங்கு வந்ததாகவும் உடனே சார்பதிவாளர் காரின் இடதுபுற பின்கதவினை திறந்துவிட்டதாகவும், அதனைத்தொடர்ந்து டேவிட் காரின் முன்சீட்டின் பின்பகுதியிலிருந்த சீட்கவரின் ஜிப்பினை திறந்து எதையோ வைத்துவிட்டு சார்பதிவாளரிடமும் எதையோ கொடுத்ததாகவும் அப்போது சோதனைக்குழுவினர் அங்குவந்து தனது காரை நிறுத்தி சார்பதிவாளர் மற்றும் டேவிட் ஆகியோரை விசாரித்த பின்னர்

பெரியநாயக்கன்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்துவந்த விபரத்தை தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து திரு.டேவிட்டை விசாரிக்க தான் கடந்த 3 வருடங்களாக இவ்வலுவலகத்தில் தினக்கூலி அடிப்படையில் வில்லங்கசான்று போடுவது மற்றும் சில சிறுசிறு வேலைகளை செய்துகொடுத்து வருவதாகவும், அந்தவகையில் தற்போது சார்பதிவாளராக பணிபுரியும் திருமதி.அருணா அவர்களுக்கும் திரு.ரமேஷ் அவர்களுக்கும் உதவியாக இருந்துவருவதாகவும், அதற்காக தினம் ரூ.500/-ஐ சம்பளமாக பெற்றுவருவதாகவும் தெரிவித்தார். மேலும் தான் திருமதி.அருணா அவர்களுக்கு சாப்பாடு மற்றும் பிற உணவுபொருட்களை வாங்கித்தருவது, திருமதி.அருணா சொல்லும் நபர்களிடம் அவர்கள் கொடுக்கும் தொகைகளை பெற்று அதனை தினம்தினம் சார்பதிவாளர் அவர்கள் வீட்டிற்கு செல்லும்போது சிலசமயம் காரில் வைப்பதாகவும், சிலசமயங்களில் சினாக்ஸ் உடன் சேர்த்து வீட்டிற்கு போகும் வழியில் கொடுத்துவரும் விபரத்தை தெரிவித்தார். அதனைத்தொடாந்து இவ்வலுவலகத்திலிருந்த மேற்படி இருவரையும் விசாரிக்க அவர்களில் ஒருவர் N.அஜீத் என்றும் தான் இவ்வலுவலகத்தில் கணினி இயக்குநராக TCS நிறுவனத்தின் சார்பில் கடந்த 9 மாதங்களாக தொகுப்பூதியத்தின் அடிப்படையில் பணிபுரிவதாகவும் தெரிவித்தார் அவரிடம் பணம் குறித்து விசாரிக்க அவர் தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று தெரிவித்தார். பின்னர் அங்கிருந்த மற்றொருவரை விசாரிக்க தனது பெயர் M.சந்துரு என்றும், சார்பதிவாளர் அழைத்தால் இவ்வலுவலகம் வந்து சிறுசிறு வேலைகளை செய்துவருவதாகவும், அதற்கு கூலியாக ரூ.500/-ஐ சார்பதிவாளர் கொடுப்பாரெனவும் தெரிவித்தார். அவரிடம் பணம் குறித்து விசாரிக்க அவர் தன்னிடம் ரூ.4,760/- எடுத்து ஆஜர் செய்தார். அதுகுறித்து விசாரிக்க தன்னிடமிருந்த பணத்தில் ரூ.500/- ஆனது 06.08.2024-ம் தேதிக்கு சார்பதிவாளரால் கொடுக்கப்பட்ட சம்பளம் எனவும், மீதிப்பணம் தனது இருசக்கர வாகனத்திற்கு Spare Parts வாங்குவதற்காக வைத்திருந்த தனது சொந்தப்பணம் எனவும் தெரிவித்தார். மேற்படி பணம் திரு.சந்துருவிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து சார்பதிவாளர் திருமதி.அருணா, திரு.டேவிட், Call Taxi ஓட்டுநர் சதீஸ்குமார் ஆகியோர்களிடம் என்னால் தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் இவ்வலுவலகத்தில் 06.08.2024-ம் தேதி காலை 10.00 மணி

முதல் இரவு 10.00 மணி வரை பதிவான கண்காணிப்பு கேமரா (CCTV Footage)-ன் பதிவினை சார்பதிவாளர் திருமதி.அருணா அவர்களிடம் அனுமதி பெற்று Compact Disc-ல் பதிவிறக்கம் செய்யப்பட்டது. மேலும் சார்பதிவாளரிடம் 06.08.2024-ம் தேதியின்படி பதிவுசெய்யப்பட்ட பதிவுகளின் விபரத்தை கேட்க (1).Year 2024 Month August Account A Periyanaickenpalayam date From 06-Aug-2024 to 06-Aug-2024 (Page No.1 to 6), (2).Year 2024 Month August Account D Periyanaickenpalayam date From 06-Aug-2024 to 06-Aug-2024 (Page No.1 to 8), (3).Year 2024 Month August IP Camera / CD Account Periyanaickenpalayam date From 06-Aug-2024 to 06-Aug-2024 (Page No.1 to 4), (4). Year 2024 Month August Account B Periyanaickenpalayam date From 06-Aug-2024 to 06-Aug-2024 (Page No.1 & 2 ), (5). Year 2024 Month August Account H Periyanaickenpalayam date From 06-Aug-2024 to 06-Aug-2024 (Page No.1 & 2), (6). Token Appointment details of 06.08.2024 (Page No.1 to 4) மற்றும் (7). மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தின் 06.08.2024-ம் தேதிக்கான CCTV Footage-ன் பதிவிறக்கம் செய்யப்பட்ட Compact Disc-1 ஆகியவை கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு சார்பதிவாளர் திருமதி.அருணா அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் (8).தொகுதி எண்:12 பணம் கையிருப்புப் பதிவேடு 01.01.2024 முதல் (பக்கம்-1 to 4), (9).தொகுதி எண்.132 வருகை பதிவேடு 01.01.2024 முதல் 31.12.2024 வரை (பக்கம்-1 to 6) ஆகிய பதிவேடுகளின் நகல் எடுக்கப்பட்டு சார்பதிவாளர் திருமதி.அருணா அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு மேற்படி அவை அனைத்தும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் கொடிநாள் வசூல் குறித்து C கணக்கு பதிவேட்டை பார்வையிட்டபோது பதிவுகள் எதுவும் காணப்படவில்லை. எனவே மேற்கண்ட முறைகேடுகளில் தொடர்புடைய திருமதி.பா.அருணா, சார்பதிவாளர், பெரியநாயக்கன்பாளையம் மற்றும் ளதிரு.சே.டேவிட் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (SdXXXXX) 07/08/2024 துணை ஆய்வுக்குழு அலுவலர்/வட்டாட்சியர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோயம்புத்தூர்.

Madam, Received the complaint along with Proceedings cash Rs.2,80,000/- Documents, Statements on 07.08.2024 at 13.30 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.4/2024/AC/CB, u/s 7(a), 7(a) r/w 12 of PC Act, 1988 as amended by PC (Amendment) Act, 2018 on 07.08.2024 at 14.00hrs (SdXXXXX) 07.08.2024 (D.SHEELA), Inspector of Police, Vigilance and Anti Corruption, Coimbatore. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு, திடீர் சோதனை நடவடிக்கைகள், வாக்குமூலம், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,80,000/- ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

07/08/2024

(D.ஷீலா),
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.